## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவீட்டுச் சட்டம்

---

*[1983, திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1983, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 60*

## 1983 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவிட்டுச் சட்டம்

[1983, திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 60/83
1606

**1984 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டிற்காக குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள்மீது புனர்வாழ்வு அறவிடு ஒன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, புனர்வாழ்வு அறவிட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

புனர்வாழ்வு அறவிடு விதித்தல்.

2. குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒவ்வொருவரிடமிருந்தும் 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டின் ஒவ்வொரு மாதத்திற்காகவும் (இதனகத்துப் பின்னர் "அறவிடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) புனர்வாழ்வு அறவீடொன்று, அம் மாதத்திற்கு அத்தகைய ஊழியரின் வேதனூதியங்களின் நூறு ஒரு வீதம் என்ற வீதத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

புனர்வாழ்வு அறவீட்டின் கொடுப்பனவு.

3. குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒவ்வொருவரினதும் தொழில் தருநர், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஊழியரால் ஏதேனும் மாதத்திற்குச் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை, அத்தகைய அறவீடு எந்த மாதத்திற்குக் கொடுக்குமதியாகவிருக்கின்றதோ அந்த மாதத்தை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

தொழில்தருநர் அறவீட்டைக் கழித்தல்.

4. குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவரின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1984 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் பஞ்சாங்க ஆண்டிலுள்ள ஏதேனும் மாதத்தில் அத்தகைய ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலனவான வேதனூதியங்களிலிருந்து, அம்மாதத்திற்கு அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

அறவீட்டை அறவிடுதல்.

5. குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவரின் தொழில்தருநர், அத்தகைய ஊழியரால் ஏதேனும் மாதத்திற்குச் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை 3 ஆம் பிரிவிற்கிணங்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தத் தவறுமிடத்து, அத்தகைய அறவீட்டுத் தொகை அத்தகைய தொழில்தருநரிடமிருந்து அறவிடப்படலாம். 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107 ஆம், 108 ஆம், 109 ஆம், 110 ஆம் பிரிவுகளினதும் XXI ஆம் அத்தியாயத்தினதும் ஏற்பாடுகள், அறவீட்டின் மதிப்பீடு, கொடுப்பனவு அறவிடுகை அத்துடன் அறவீட்டின் கொடுப்பனவிலான தவறுகைக்கான தண்டங்கள் என்பனவற்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஏ 073952—3,350 (12/83)

*1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அறவிட்டைக் கருதுதல்.*

6. குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவரின் தொழில்தருநர் ஏதேனும் மாதத்திற்கு அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான அறவிட்டைச் செலுத்தி, ஆனால் அத்தகைய அறவிட்டுத் தொகையை, அம் மாதத்திற்கு அத்தகைய ஊழியரின் ஊதியங்களிலிருந்து கழிக்காதிருக்குமிடத்து, அத்தகைய அறவிட்டுத் தொகையானது—

(அ) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய தொழில்தருநரின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக ஒரு கழிப்பனவாக அனுமதிக்கப்படுதல் ஆகாது ; அத்துடன்

(ஆ) அச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஊழியரின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் பாகமாகக் கருதப்படுதல் ஆகாது.

*தொழில்தருநர்கள் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பது.*

7. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அவரது ஊழியத்தில் குறித்துரைக்கப்பட்ட ஊழியர் ஒருவரைக் கொண்டிருக்கும் தொழில்தருநர் ஒவ்வொருவரும், அவர் தமது ஊழியத்தில் அத்தகைய ஊழியரைக் கொண்டிருக்கின்றாரென 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் தேதிக்குப் பிந்தாமல் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒருவர், இச்சட்டம் தொடங்கும் தேதியின் பின்னர் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஊழியரைத் தொழிலுக்கமர்த்தத் தொடங்குமிடத்து, அவர் தமது ஊழியத்தில் அத்தகைய ஊழியரைக் கொண்டிருக்கின்றாரென அத்தகைய ஊழியம் தொடங்கியதிலிருந்து ஒரு மாத காலத்துள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்குமாறு இப்பிரிவினால் தொழில்தருநர்மீது சுமத்தப்பட்ட தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறும் தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய அறிவித்தல் கொடுக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஐயாயிரம் ரூபா தண்டமொன்று செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும். செலுத்தப்படாத ஏதேனும் தண்டப்பணத்தின் அறவிட்டுக்கு அத்தகைய தண்டம் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவிடொன்று என்றாற்போன்று, 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்புடையனவாதல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

8. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டதாகும் ;

"வேதனங்கள்" என்பது, குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவர் தொடர்பாக, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், குறிப்பிடுசெய்யப்பட்டவாறாக அவ்வூழியரின் ஏதேனும் ஊழியத்திலிருந்து அல்லது முன்னைய ஊழியத்திலிருந்துவரும் அத்தகைய இலாபங்கள் எனப்பொருளாகும்.

ஆனால் அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் அல்லது (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் பாகை அல்லது எவையேனும் வேதனாதிகளை உள்ளடக்காது ;

"தொழில்தருநர்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 113 ஆம் பிரிவில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டதாகும் ;

"குறித்துரைக்கப்பட்ட ஊழியர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் ஊழியத்திலிருந்து அல்லது முன்னைய ஊழியத்திலிருந்து இலாபங்களைப் பெறுகின்றவரும் அத்துடன்—

(அ) அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராகவும் ; அல்லது

(ஆ) எந்த ஆள் தொடர்பில் 1958 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்துக்கு அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியத்துக்கு அல்லது உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு உதவு தொகையொன்று செலுத்தப்படற்பாலதோ அந்த ஆளொருவராகவும் ; அல்லது

(இ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் பயனைக்கொண்டு எந்த ஆள் தொடர்பில் ஊழியர் சகாய நிதியத்துக்கு உதவுதொகையொன்று செலுத்தப்படற்பாலதல்லாதிருக்கின்றதோ அந்த ஆளொருவராகவும் ; அல்லது

(ஈ) கம்பெனியொன்றின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பணிப்பாளரொருவராகவும் அல்லது பங்காண்மையொன்றின் தொழில் பங்காளரொருவராகவும்,

இருக்கின்ற எவரேனும் ஆள் எனப்பொருளாகும். ஆனால் இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) முதல் (ஏ) வரையிலான பந்திகளின் கீழ் அல்லது (ஓஓ) என்னும் பந்தியின்கீழ் அவரது ஊழியத்திலிருந்தானவரும் இலாபங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவரும், அந்தச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லாதவரும் ஆன எவரேனும் ஆளை உள்ளடக்காது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.